எஸ்.டி.சி. 37 / 2017 நாள் 1.2.2018

சாட்சி. திரு. அருணாகுமார்

சாட்சி ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை =

எனக்கு தற்போது 54 வயதாகிறது. முதல் விசாரணையில் உள்ள சங்கதிகள் நான் கூறியது தான் என்று சொன்னால் சரிதான். என் பெயர் அருணாகுமார் என்னை அருண்குமார் என்று அழைப்பார்கள் வழக்கு அருண்குமார் என்ற பெயரில் தான் போடப்பட்டுள்ளது. நிரூபணபிரமாண பத்திரிக்கையில் வயது 40 என குறிப்பிடப்பட்டுள்ளது தவறு. நான் விரைவுபோக்குவரத்து கழகம் தமிழ்நாட்டில் ஒட்டுநராக பணிப்புரிந்து வருகிறேன் அது அரசு நிறுவனம். நிரூபண பிரமாண பத்திரிக்கையில் நான் வர்த்தகம் செய்வதாக குறிப்பிட்டுயிருக்கிறேன் என்றால் அது தவறு. நான் பெயர், வயது, தொழில் ஆகியவற்றை தவறாக குறிப்பிட்டுயிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி 1998ம் வருடத்திலிருந்து எனக்கு பழக்கம். எதிரி சென்னையில் வசிக்கிறார். நான் சென்னையில் 15 ஆண்டுகள் வசித்துவந்தேன் என் சொந்த ஊர் திருப்பத்துார் தற்போது என்னை சேலத்திற்கு பணிமாறுதல் செய்திருக்கிறார்கள். 1998 முதல் 2013 வரை சென்னையில் வசித்துவந்தேன். நான் வழக்கு காசோலையை மூன்று முறை தான் வசூலுக்காக வங்கியில் செலுத்தினேன். 22.6.2016ம் தேதி முதல் முறையும் 05.11.2016ம் இரண்டாம் முறையும் போட்டதாகவும் அதற்கு மேல் போடவில்லை என்றும் கூறுகிறார். 5.11.2016ம் தேதி வசூலுக்கு போட்ட காசோலைக்கு 31.11.2016ம் தேதி சட்டஅறிவிப்பு அனுப்பினேன். அதில் இரண்டு முறை வசூலுக்காக போட்டதாக சொல்லியிருக்கிறீர்களா என்றால் சாட்சி இல்லையென கூறுகிறார். நான் இரண்டு முறை வசூலுக்காக போட்டது தவறு என்றும் மூன்று முறை வசூலுக்கு போட்டேன்

WEB COPY

என்றால் தவறு. 22.11.2016ம் தேதி இன்னொறு முறை வசூலுக்காக போட்டேன் என்றால் சாட்சி இல்லையெனக் கூறுகிறார்.

வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

WEB COPY

WEB COPY